*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – V Issue – 2
May -2021

# சு.தமிழ்ச்செல்வியின் புதினங்களில் சடங்குகள்

பிரேமா,கா.
முதுகலை தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர்.

**Corresponding author:prema@vvvcollege.org**

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதன் பிறப்பதற்கு முன்னும் பிறந்து வாழும் காலத்திலும் இறந்த பிறகும் சடங்குகள் விதிக்கப்படுகின்றன. இவை தொடக்கக் காலத்தில் தேவை கருதி தொடங்கப்பட்டன. காலம் செல்லச் செல்லப் பெயருக்குச் சடங்கு என்னும் நிலைக்குச் சென்று விட்டோம். சு.தமிழ்ச்செல்வி அவர்கள் தனது புதினங்களில் சடங்குகள் குறித்து பிறப்பு முதல் இறப்பு வரை நாம் நடைமுறையில் பயன்படுத்திவரும் சடங்குகள் குறித்துக் கூறியுள்ளதை இவ்வய்வில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**குறிப்புச்சொற்கள்: சடங்குகள், வழிபாடு, நம்பிக்கைகள், மோட்னிச்சா வழிபாடு, பெயரிடும் சடங்கு**

## முன்னுரை

பண்டைய காலந்தொட்டு இன்றுவரை மனிதனுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் சமுதாயச் சடங்குகள் இன்றியமையாதனவாக இருந்து வருகின்றன. மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்வில் வளமும், நலமும் வேண்டிப் பல்வேறு சடங்குகளைச் செய்கிறான். மரபுகளின் அடிப்படையாகத் தோன்றுகின்ற இவை ஒரு சமுதாயத்தின் நம்பிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும், பண்பாட்டையும் வெளிப்படுத்துகின்றன. மனித இனத்தாரிடம் இடம் பெற்றுள்ள சடங்குகளும், நம்பிக்கைகளும் இடத்திற்கு இடம், இனத்திற்கு இனம் வேறுபட்டுக் காணப்படுகின்றன. முன்னோர்கள் செய்து வந்த சடங்கு முறைகளைச் செய்வதால் நலவாழ்வும், செய்யத்தவறினால் தீமைகளும் நேரும் என்ற அச்சமும் மக்களிடம் காணப்படுகின்றன. இச்சடங்கு முறைகள் மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கம் போன்றவற்றை அறிய உதவுகின்றன. இவ்வகையில்

சு.தமிழ்ச்செல்வி அவர்களின் படைப்புகளில் கூறப்பட்டுள்ள சடங்குகளும் நம்பிக்கைகளும் ஆராயப்படுகின்றன. இவர்தம் படைப்புகளில் பிரதிபலிக்கும் வாழ்வியல் நெறிகள் சார்ந்த சடங்குகள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டு ஆராயப்படுகின்றன.

1. பிறப்புச் சடங்குகள்
2. பூப்புச்சடங்குள்
3. இறப்புச் சடங்குகள்

**பிறப்புச் சடங்குகள்**

**குழந்தை பிறக்கும் முன்**

'மாணிக்கம்' புதினத்தில் செல்லாயி ஐந்து மாதக்கர்ப்பிணியாக இருக்கும் பொழுது அவளுக்குத் தாய் இல்லாததால் அவளுடைய அக்கா சரசு அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று "ஐந்து மாத மருந்து கொடுத்து மறு மூணாம் நாள் கொண்டு வந்து விட்டுவிட்டுப்" போன செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. தற்பொழுது இச்சடங்குமுறை ஏழாம் மாதம் அல்லது ஒன்பதாம் மாதம் வளைகாப்பு என்ற பெயரில் நடத்தப்படுகிறது.

**மோட்னிச்சா வழிபாடு**

குழந்தை பிறந்து நடத்தப்படும் பதினாறாம் நாள் பெயர் சூட்டும் விழா மோட்னிச்சா வழிபாடு என்று அழைக்கப்படுகிறது. இவ்வழிபாடு பெரியாச்சி என்ற சிறுதெய்வத்திற்கு நடத்தப்படுவது குறிப்பிடப்படுகிறது. அச்சமயம் நடைபெறும் சடங்குகள் குறித்து 'மாணிக்கம்' புதினத்தில் கூறப்பட்டுள்ளது. செல்லாயியின் பாட்டி சரசுவிடம், கூறுவதாக

"புளுங்கரிசிப்போட்டு மொதல்ல வறுத்திடு சரசு. அதக்கொட ஒரு கட்டிப் பெருங்காயத்தையும் போட்டுக்க என்றாள் பின்னர் பொரியரிசியையும், பெருங்காயத்தையும் வைத்துப் பொடிந்தாள். பொரிமாவுடன் கருப்பட்டியை நச்சிப்போட்டு ஒரே ஒரு கொழுக்கட்டை பிடித்தாள். பச்சரிசி மாவில் பிடிக்கொழுக்கட்டையாம் தாய் கொழுக்கட்டையும் பிடித்தார்கள். கொழுக்கட்டை மாவால் அகல்விளக்கு போல உள்ளங்கை அளவுக்கு ஒன்று அதைவிடச் சின்னது, அதைவிடச் சின்னது என்று ஐந்து தாய் கொழுக்கட்டைகளை எல்லாம் உடைந்து போகாமல் வேகவைத்து எடுத்து வைத்தார்கள். பச்சரிசி சோறு பொங்கி பத்தியப்பொடி போட்டு கருவாட்டுக் குழம்பு வைத்து, முருங்கைக் கீரை சுண்டி எடுத்து வைத்தார்கள்" என்பதாக விளக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் மோட்னிச்சா கும்பிடுவதற்காக வைக்கப்பட்ட பொருட்கள் ஆகும். ஆண்கள் யாரும் இல்லாமல் பெண்கள் மட்டும் இருந்து வணங்கும் சடங்காக இது அமைந்துள்ளது. செல்லாயி பிள்ளை பெற்றுக் கொண்டு கிடந்த அறையில் வைத்துத் தான் இச்சடங்கு முறை நடத்தப்பெற்றுள்ளது. பிரசவம் பார்த்த அரும்பாயி, ரெத்தினம் என்ற இரு பெண்கள்தாம் இச்சடங்கை முன்னின்று நடத்தியதாக ஆசிரியர் சு.தமிழ்ச்செல்வி பதிவு செய்துள்ளார். இவ்வழிபாட்டில்

“கொழுக்கட்டையைப் பெரிதிலிருந்து சின்னதென்று வரிசையாய் திரிபோட்டு எண்ணெய் ஊற்றி கொளுத்தி வைத்தார்கள். விளக்குக்கு முன் வாழையிலையில் காயம், கருப்பட்டி போட்டு செய்த கொழுக்கட்டையை முதலில் எடுத்து வைத்தாள் ரெத்தினம்” என்பது கூறப்பட்டுள்ளது. மேலும், பச்சரிசி சோறு போட்டு கருவாட்டுக் குழம்பும், பிடி கொழுக்கட்டைகளையும், முருங்கைக் கீரையையும் எடுத்து வைத்தார்கள். விளக்குக்கு முன்னால் குழந்தையைப் போட்டு வணங்கினர். பின்பு பிள்ளையார் பிடித்து விளக்கேற்றி இலை போட்டு அதில் காப்பரிசி, வெற்றிலைப் பாக்கு, வாழைப்பழம், பூ, சீனி, சர்க்கரை, வேப்பிலைக்காப்பு எல்லாம் வைக்கப்பட்டிருந்தன. பின் படிக்குள் அனைவரும் கொண்டு வந்திருந்த சீர்கள் இடப்பட்டன. பின்பு செல்லாயிடம் குழந்தையை முறத்தில் வந்து போடச் சொல்லி சீர்கள் இடப்பட்டிருந்த படியைக் குழந்தையின் காதோரத்தில் வைத்துக் குலுக்குகின்றனர். அப்போது

> **“ஒண்ணாங்காப்பு, ரெண்டாங்காப்பூ, மூணாங்காப்பூ... பதினாறாங்காபூ என்று பதினாறுமுறை படியைக் குலுக்கி விட்டு படியை பிள்ளையின் பக்கத்திலேயே வைத்தாள்”**

என்ற செய்தி மோட்னிச்சா சடங்கைப் புலப்படுத்துகிறது. ஆனால் பிற மாவட்டங்களில் உறவினர்கள் கையில் குழந்தையைக் கொடுக்கும் போது தாங்கள் கொண்டு வந்துள்ள சீர், பரிசுப்பொருட்களைக் குழந்தை அல்லது குழந்தையின் பெற்றோரிடம் கொடுப்பதான நிலை இடம் பெற்றுள்ளது.

### பெயரிடும் சடங்கு

மோட்னிச்சா சடங்கு முடிந்த பின்பு குழந்தைக்குத் தமிழ்வாணி என்று பெயரிடப்பட்டுள்ளது. ‘ரெத்தினம், குழந்தை இருந்த முறத்தைத் தூக்கி விளக்குக்கு நான்கு பக்கமும் வைத்துத் தூக்குகின்றாள். மூன்று சுற்று சுற்றி வந்து முறத்தோடு குப்பைக் குழியருகில் கொண்டு சென்று குப்பையையும், மேல் கூரையையும் காட்டினாள். பின்னர் குழந்தையைத் தாயிடம் கொடுத்ததாகக்’ கூறவதன் வழி என்று பெயரிடுவது குறித்த சடங்கு முறையை ஆசிரியர் சு.தமிழ்ச்செல்வி புதினத்தில் பதிவு செய்துள்ளார்.

### தத்துச் சடங்கு

நாட்டுப்புறத்தில் பல சிறுதெய்வங்கள் குறிப்பிடப்பட்டாலும் அவர்களுள் முதன்மையாக வணங்கும் தெய்வமாக மாரியம்மன் இடம் பெற்றுள்ளது. அடுத்தடுத்து குழந்தை பிறந்து இறந்தால் அடுத்து பிறக்கும் குழந்தையை மாரியம்மனுக்குத் தத்துக் கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. இச்செய்தி ‘கற்றாழை’ புதினத்தில் குறிப்பிடப் பெற்றுள்ளது. சான்றாக மணிமேகலைக்கு முதல் குழந்தை பிறந்து நான்கு நாட்களில் இறந்து விட அடுத்த குழந்தை பிறந்தவுடன் மாரியம்மன் கோவிலுக்கு வந்து

**“எள், தவிடு இவற்றை மாரியம்மனிடமிருந்து பெற்றுக்கொண்டு குழந்தை சத்தியாவை மாரியம்மனுக்குத் ‘தெத்தம்’ பண்ணிக் கொடுத்துவிட்டுப் போயிருந்தாள்”**

என்பதன் வாயிலாக குழந்தையின் உயிரைக் காக்கும் தெய்வமாக மாரியம்மன் இருக்கிறது என்பதும் அத்தெய்வத்திற்கு எள், தவிடு போன்றவற்றைப் படைத்துத் தத்துச்சடங்கை மேற்கொண்டனர் என்பதும் புலனாகிறது மேலும் இப்புதினத்தில் சத்யா திருமணத்தின் போது,

“மாரியம்மன் தத்து எடுத்திருக்கும் பெண்ணை யாருடைய விருப்பம் போலவும் யாரும் தாலி கட்டி சொந்தமாக்கிக் கொள்ள முடியாது என்பதால் தத்துத் திருப்பும் சடங்கு” ஒன்றையும் மேற்கொண்ட முறையையும் புதினத்தில் ஆசிரியர் சு.தமிழ்ச்செல்வி பதிவு செய்துள்ளதைக் காணமுடிகிறது.

தத்துத்திருப்பும் சடங்கு என்பது புதியதான சடங்காக அமைந்துள்ளது. இதன்வழி எந்தத் தெய்வத்திற்குக் குழந்தை தத்துக் கொடுக்கப்பட்டதோ அதற்கே அக்குழந்தை சொந்தம் என்பதும், தத்துத்திருப்பும் சடங்கை மேற்கொள்வதன் மூலமே அக்குழந்தைக்கும் மாரியம்மனுக்குமான தொடர்பைத் துண்டிக்க இயலும் என்பதும் மக்களின் நம்பிக்கையாக இருந்த நிலை இதன் வழி புலப்படுத்தப்பட்டுள்ளது.

**பூப்புச் சடங்குகள்**

பெண் தாய்மை அடைவதற்குரிய பக்குவத்தை அடைவதே பூப்பெய்தல் எனலாம். பூப்படைதல் என்பது குழந்தைப் பருவத்தின் இறுதியாகவும் பெண்மையின் தொடக்கமாகவும் கருதப்படுகிறது. சமுதாயத்தில் பெண்கள் உரிய வயதில் பூப்படைவதே நலமானதாகக் கருதப்படுகிறது.

‘அளம்’ புதினத்தில் மக்களிடம் இடம்பெற்றிருந்த பூப்புச் சடங்கு முறை புலப்படுத்தப் பெற்றுள்ளது. ராசம்பாள் பூப்பு அடைந்தவுடன் சுந்தராம்பாள் பக்கத்தில் உள்ள பெண்களை அழைத்து,

“சீனிசர்க்கரை வாங்கிவந்து தலைக்குத் தண்ணீர் ஊற்றி மாட்டுக்கொட்டகையில் பச்சை மட்டையால் விரியலைக் கட்டி உட்கார வைத்துவிட்டாள். இனிமேல் ஏழாம் நாள் புட்டு, களி எல்லாம் கிண்டி தலைக்குத் தண்ணீர் ஊற்றி உட்காரவைத்து ஏற்றிவைக்க வேண்டும். மறுபடி பதினோராம் நாளோ பதினைந்தாம் நாளோ புட்டு, களி சாப்பாடெல்லாம் செய்து தலைக்குத் தண்ணீர் ஊற்றி இறக்கி வைக்க வேண்டும். தனித்தனியா செலவு பண்ண என்னால முடியா ஒரே நாளுல ஏத்தி எறக்கி வச்சிறணும்” என்பதன் வழி வறுமையின் காரணமாக சுந்தராம்பாள் தன்னால் செய்யவியலாத பூப்புக்குரிய இருசடங்குகளையும் ஏழாம் நாளே செய்து முடித்ததான செய்தி குறிப்பிடப் பெற்றுள்ளது. இவ்வாறே பதினோராம் நாளில் தலைக்குத் தண்ணீர் ஊற்றிக் கோமியம் தெளித்து குடிக்கச் செய்து வீட்டிற்குள் அழைத்துக் கொண்டாள். என்பதன் வாயிலாக சடங்கு முறைகளில் சூழலுக்குத் தக்கவாறு சில செயல்முறை மாற்றங்கள்

ஏற்படுத்தப்படுகின்றன என்பதும் புலனாகின்றது.

'கீதாரி' புதினத்தில் சிவப்பி பூப்பு அடைந்தவுடன் அவளைத் தனியே கொட்டகையில் ஓர் ஓரத்தில் இருக்கச் செய்து உளுந்தங் களியைச் சாப்பிடச் செய்யும் சடங்குமுறை கூறப்பட்டுள்ளது. இவற்றின் வழி ஏழைகள் தங்களுக்கு உகந்த வகையில் பூப்புச்சடங்கை மேற்கொண்ட நிலையை அறிய முடிகிறது.

**இறப்புச் சடங்குகள்**

'மாணிக்கம்' புதினத்தில் செல்லாயியின் கடைசி மகள் இறந்து விடுகிறாள். சிறு வயதில் பிள்ளை இறந்துவிட்டால் இரண்டாவது நாளில் வீட்டின் ஓர் ஓரத்தில் விளக்கினை ஏற்றி வைக்கும் வழக்கம் இருந்துள்ளது. விளக்கின் பக்கத்தில் பிள்ளையின் துணிமணிகளும் உடைந்த ஓரிரண்டு விளையாட்டுப் பொருட்களும் வைக்கப்படுகின்றன. இவற்றின் மூலம் சிறு வயதில் மரணமுற்ற குழந்தையின் உயிர் அமைதியடைய வேண்டிச் சில சடங்குகளைச் செய்துள்ளமையும் அறிய முடிகின்றது.

'மாணிக்கம்' புதினத்தில் தங்கத்தாச்சி இறப்பின் வாயிலாக இறப்புச் சடங்கு முறையை ஆசிரியர் சு.தமிழ்ச்செல்வி வெளிப்படுத்தியுள்ளார். தங்கத்தாச்சி இறந்தவுடன் நிலைக்கதவு இழுத்துச் சாத்தப்பட்டு நிலைப்படிக்கட்டையில் கத்தியைக் குறுக்காகப் போட்டார்கள். நாற்காலியின் இரண்டு பக்கமும் இரு வெண்கலக்குடங்களில் தண்ணீர் வைத்தனர். தென்னம் பாளையை விரித்துக் கருதுகள் தொங்குமாறு குடத்தில் வைத்தனர். நாற்காலியில் அமர வைத்த தங்கத்தாச்சியின் தலைக்கு நேராக கம்பை ஊன்றி தர்ப்பைப் புல் கட்டினர். இடித்த வெற்றிலைப் பாக்கை வாயில் வைத்து துணி போட்டு கட்டினார்கள். நெற்றியிலும் கண்களிலும் சந்தனத்தைக் குழைத்து வைத்தார்கள். நெற்றியில் காசை வைத்தனர். வெள்ளைத்துணி கிழித்துக் கை கட்டை விரல்களிரண்டையும், கால் கட்டை விரல்களிரண்டையும் சேர்த்துக் கட்டினார்கள். தாம்பாளத்தில் நெல்லை வைத்துப் பாதம் நெல்லில் படும்படி அழுத்தி வைத்தார்கள் என்றவாறு இறப்புச் சடங்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

உயிரிழந்தோரின் நெற்றியில் காசு வைப்பது குறித்துப் "பிணத்தின் மேல் அல்லது கல்லறையின் மேல் வைக்கப்படும் காசு இறந்தவர், இறந்தோர் உலகிற்குச் செலுத்த வேண்டிய கட்டணம் ஏதேனுமிருந்தால் அதற்காகவும், இறந்தோர் தம்முடைய சொத்தைப் பெறவேண்டி திரும்பி வராமல் தடுப்பதற்காகவும் வைக்கப்படுகிறது" என்று சு.பாலமுருகன் குறிப்பிடும் கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது.

**சம்பந்தி வீட்டார் சடங்கு**

தாய் இறந்தவுடன், பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்த சம்பந்தி வீட்டில் இருந்து சம்பந்தி வீட்டினர் செய்யும் முறையைப் பற்றி 'மாணிக்கம்' புதினத்தில்

கூறப்பட்டுள்ளது. தப்பு, தாரையோடு வானவெடிச்சத்தம் முழங்க சம்பந்தி வீட்டினர் வரும் முறைமை புலப்படுத்தப்பட்டுள்ளது.

“ஒரு பெண் வாய்க்கரிசி சட்டி எடுத்து வந்தாள். அரிக்கன்சட்டியில் நெல்லும் அரிசியுமாய் கலந்திருக்கும் வாய்க்கரிசி, நல்லெண்ணெய், அரப்புத்தூள், கோடித்துணி, மாலை, பத்தி, வெற்றிலைப்பாக்கு இருந்தது. ஒரு பிரம்புக்கூடை நிறை நெல்லும் அதன் மீது இரண்டு மூன்று சீப்பு வாழைக்காயும் வைத்து இன்னொரு பெண் தலையில் தூக்கி வந்தாள்”[9] என்பதன் வாயிலாக சம்பந்தி வீட்டினர் செய்யும் சடங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

மனிதனின் இறுதிக்கட்டம் இறப்பு என்பதால் இறந்தவர்க்கு மரியாதை தரும் விதமாக இச்சடங்கு முறை நிகழ்த்தப்படுகிறது. மேலும் இறந்தவர் வீட்டில் சமைக்கக் கூடாது என்பதால் அவ்வூரில் உள்ள உறவினர் இறந்தவர் வீட்டிற்கு வந்திருக்கும் அனைவருக்கும் கஞ்சி தரும் வழக்கமும் இருந்துள்ளது. இவ்வாறு இறப்புச் சடங்கு முறை குறித்த செய்திகளை ஆசிரியர் சு.தமிழ்ச்செல்வி பதிவு செய்துள்ளார்.

## தொகுப்புரை

1. சு.தமிழ்ச்செல்வியின் புதினங்களில் பிறப்புச் சடங்குகள், பூப்புச் சடங்குகள், இறப்புச் சடங்குகள், குறித்துக் கூறப்பட்டுள்ளன.
2. பிறப்புச் சடங்கில் மோட்னிச்சா வழிபாடு குறித்தும் தத்துச் சடங்கு குறித்தும் ஆசிரியர் சு.தமிழ்ச்செல்வி பதிவு செய்துள்ளார்.
3. பூப்புச் சடங்கில் நடத்தப்படும் சடங்குமுறை குறித்துக் கூறப்பட்டுள்ளது.
4. இறப்புச்சடங்கில் சம்பந்தி வீட்டார் சடங்கு சுட்டப்பட்டுள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. தமிழ்ச்செல்வி, சு., மாணிக்கம், ப-83.
2. மேலது, ப-120.
3. மேலது ப-122.
4. மேலது ப-124.
5. சு.தமிழ்ச்செல்வி, கற்றாழை, ப-7.
6. மேலது ப-7.
7. சு.தமிழ˙ச்செல்வி, அளம், ப-60.
8. சு.பாலமுருகன், கொல்லிமலைப் பழங்குடிகளின் வாழ்க்கை வரலாறு, ப-86.
9. தமிழ்ச்செல்வி,.சு., மாணிக்கம், ப-227,228.